பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

30 08 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் மகளிரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.
2. துறைமுகங்கள் நவீன மயமாக்கல் பணிகளுக்கும், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்கும் மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியை அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. சம்பை சோரன் இன்று பிஜேபி-யில் இணைந்தார்.
5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<u>இனி விரிவான செய்திகள்--</u>

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் மகளிரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வளர்ச்சியடைந்த பாரதம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், திட்டமிடப்பட்ட வளர்ச்சி இலக்கை மகளிரின் பங்களிப்பு இல்லாமல் அடைய முடியாது என்று கூறினார்.

கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் கவலையளிப்பதாக தெரிவித்த அவர், நாகரீக சமுதாயத்தில் மகளிருக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படுவதை தடுக்க வேண்டும் என்றார்.

வேகமான பொருளாதார வளர்ச்சியை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாகவும், சுற்றுச்சூழலியல் தொழில் வளர்ச்சி முன்னேற்றமான நிலையை எட்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

கழிவறைகளுடன் கூடிய வீடு, எரிவாயு இணைப்பு, குழாய் மூலம் குடிநீர் இணைப்பு போன்ற அடிப்படை வாழ்வாதார வசதிகளை மக்கள் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் பொருளாதாரத்தில் முன்னேறி உலக அளவில் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா வளர்ச்சியடைந்திருப்பதையும் குடியரசு துணைத்தலைவர் சுட்டிக்காட்டினார்.

பருவநிலை மாற்ற சவால்கள் கவலை அளிக்கக்கூடியது என்றும், இதனை முறியடிக்க மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் மரக்கன்றுகளை நட வேண்டும் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

துறைமுகங்கள் நவீன மயமாக்கல் பணிகளுக்கும், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்கும் மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் பால்கரில் 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள வத்வான் ஆழ்கடல் துறைமுகத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், நாட்டின் கடலோர பகுதிகள் கடந்த பத்தாண்டுகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் மேம்பாடு அடைந்திருப்பதாக கூறினார்.

கடலோர போக்குவரத்துக்கு முக்கிய நுழைவு வாயிலாக உலகத்தரத்தில் வத்வான் துறைமுகம் அமைக்கப்படும் என்றும், பெரிய கப்பல்களை கையாளும் என்பதால், நாட்டின் வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

துறைமுக மேம்பாட்டில் தனியார் முதலீடுகள் அதிகரித்திருப்பதன் காரணமாக ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்து வருவதாகவும் பிரதமர் கூறினார்.

வத்வான் துறைமுகத்தை ஒட்டுமொத்த உலக நாடுகளும் எதிர்நோக்கியிருப்பதாகவும், இந்த துறைமுகம் செயல்பாட்டுக்கு வந்ததும் இந்த பகுதியில் பொருளாதார நிலை மிகப்பெரிய அளவில் மேம்படும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், நாடுமுழுவதும் ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான 218 மீன்வளத் திட்டங்களுக்கும் பிரதமா் அடிக்கல் நாட்டினார்.

மேலும், 360 கோடி ரூபாய் செலவில் தேசிய கப்பல் தகவல் தொடர்பு மற்றும் ஆதரவு அமைப்பையும் அவர் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, மும்பையில் நடைபெற்ற உலகளாவிய Fintech விழாவில் பங்கேற்று பேசிய பிரதமர், டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மூலம் வங்கி நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை ஏற்பட்டிருப்பதாகவும், பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்கினை வகிப்பதாகவும் கூறினார்.

நாட்டின் நிதி தொழில்நுட்ப புத்தாக்கம் குறித்து பெருமிதம் தெரிவித்த அவர், விரைவான வளர்ச்சிக்கு டிஜிட்டல் பரிவர்த்தனைகள் வழிவகுக்கிறது என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உச்சநீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ள மாவட்ட நீதித்துறை தேசிய மாநாடு புதுதில்லியில் நாளை தொடங்குகிறது.

பாரத் மண்டபத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த மாநாட்டை தொடங்கிவைத்து உரையாற்றுகிறார்.

உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டு 75 ஆண்டுகளை குறிக்கும் வகையில், அஞ்சல் தலையையும், நினைவு நாணயத்தையும் பிரதமர் இந்த நிகழ்ச்சியில் வெளியிடுகிறார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மூன்று நாள் அரசு முறைப்பயணமாக புருனே மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு வரும் செவ்வாய்க்கிழமை புறப்பட்டு செல்கிறார்.

புதுதில்லியில், செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், புருனே மன்னரின் அழைப்பின்பேரில் பிரதமர் அங்கு செல்வதாகவும், இந்திய பிரதமர் ஒருவர் அந்நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறை என்றும் தெரிவித்தார்.

சிங்கப்பூர் பிரதமர் திரு **Lawrence Wong** –ன் அழைப்பை ஏற்று திரு நரேந்திர மோடி வரும் புதன்கிழமை செல்ல இருப்பதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

<<<<<<>>>>>>

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் நாளிதழ் ஒன்று ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியை அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த நிதியாண்டை பொறுத்தவரை 21 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. சம்பை சோரன் இன்று ராஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிஜேபி-யில் இணைந்தார்.

பிஜேபியில் இணைந்தது பற்றி கருத்து தெரிவித்த அவர், பழங்குடியினரின் அடையாளத்தை பாதுகாக்கும் வகையில் தாம் பிஜேபி-யில் இணைந்துள்ளதாக கூறினார்.

பங்களாதேஷிலிருந்து ஜார்க்கண்டின் சந்தால் பர்கானாவிற்கு பரவலாக ஊடுருவல் அதிகரித்துள்ளதால், பழங்குடியினரின் நிலை கேள்விக்குறியாகி இருப்பதாகவும் திரு சம்பை சோரன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

ஓய்வூதியதாரர்களின் விண்ணப்ப நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஓய்வூதியதாரர்களின் **'Bhavishya** இணையதளத்தை டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைக்கும் வகையிலான நடைமுறையை காணொலி மூலம் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

ஓய்வூதியம் கோரி விண்ணப்பிப்போர் ஒருங்கிணைந்த இணையதளத்தில் டிஜிட்டல் முறையில் விண்ணப்பிக்க இது வழிவகுப்பதாக திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அமைச்சரவை செயலாளராக நியமிக்கப்பட்ட மூத்த ஐ ஏ எஸ் அதிகாரி திரு **'T V Somanathan '** இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை இப்பதவியில் இருந்த திரு ராஜீவ் கௌபா ஓய்வு பெற்றதையடுத்து, தமிழக பிரிவு ஐ ஏ எஸ் அதிகாரியான திரு **T V Somanathan** அண்மையில் அமைச்சரவை செயலாளராக நியமிக்கப்பட்டார்.

<<<<<<>>>>>>

ஒடிஷா, கடலோர ஆந்திரா, சத்தீஷ்கர் மற்றும் தெலங்கானா மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத்தின் ஒரு சில பகுதிகளிலும், நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள், மேற்குவங்கம், அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் அடுத்த இரு தினங்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

கேரள மாநிலத்தின் எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கையும், இதர ஐந்து மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

கட்ச் பகுதியில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, வடகிழக்கு அரபிக்கடலில் புயலாக மாறி, பாகிஸ்தானை நோக்கி நகரக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, கட்ச் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் கனழை பெய்யக்கூடும் என்றும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வானிலை மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கிடையே, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த இரண்டு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மகளிர் துப்பாக்கிச்சுடும் போட்டியின் பத்து மீட்டர் பிரிவில் **Avani Lekhara** தங்கப்பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்தார்.

பாராலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து இரண்டு முறை தங்கப்பதக்கத்தை வெல்லும் முதலாவது இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இப்பிரிவில் **Mona Agarwal** வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

ஆடவர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் **Manish Narwal** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் 100 மீட்டர் ஓட்டத்தில் **Preethi Pal** வெண்கலப்பதக்கம் வென்றார்.

பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Suhas Yathiraj** மற்றும் நிதிஷ்குமார் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் பதக்கம் வென்றவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.

பதக்கம் வென்றவர்களின் சாதனைகளை கண்டு நாடு பெருமிதம் கொள்வதாக சமூக வலைதளத்தில் பிரதமர் பதிவிட்டுள்ளார்.

-------------

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 21-18 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Marwan Faza – Aisyah Salsabila Putri Pranata** இணையை வென்றது.

------------------

மகளிர் **Speedchess** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Vaishali** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

பெருவில் நடைபெற்றுவரும் உலக இளையோர் தடகள சாம்பியன் போட்டியின் உயரம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் பூஜா சிங் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

புனேயில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Bhargav Ram - Vennala Kalagotla** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 21-13, 24-22 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Huang Hong Yu - Wang Li Hsuan** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Surya Charisma**–வும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>**